<u>2025 ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 124 /2024</u>

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19– ஆம் தேதி செவ்வாய்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – சின்னச்சாமி |
| தகப்பனார் பெயர்: | பால்சாமி |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓவியர் |
| வயது : | 36 |

19.08.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்சமயம் போடிநாயக்கனூர், ஜெயம் நகரில் வசித்து வருகிறேன். நான் ஓவியராக தொழில் செய்து வருகிறேன். வழக்கு எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். சுமார் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு நானும், மதன் என்பவரும் காலை சுமார் 5 மணியளவில் டீ குடிப்பதற்காக சுப்புராஜ் நகரில் உள்ள சந்தன மாரியம்மன் கோவில் அருகே சென்றோம். போடிநாயக்கனூர் டவுன் போலீசார் அங்கே இருந்தார்கள். எதிரி தமிழன் என்பவர் அங்கிருந்தார். அவரிடம் போலீசார் பேசிக்கொண்டிருந்தார்கள். போலீசார் எதிரியிடமிருந்து வாக்குமூலம் வாங்கினார்கள். அவர் சொன்ன வாக்குமூலத்தை காவல் துறையினர் லேப்டாப்பில் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தில் நானும், மதன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம்

என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள் மற்றும் இருச்சக்கர வாகனத்தை பேரையூர் அருகே உள்ள மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் நண்பருடைய மோட்டார் ரூமில் இருப்பதாகவும், அவற்றை நான் எடுத்துத் தருகிறேன் என்று சொன்னார். அதன்படி என்னையும், மதன் என்பவரையும், எதிரி தமிழன் ஆகியோர்களை மேற்படி கிராமத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரில் அரிவாள் இருந்தது. எதிரிகள் எடுத்து ஆஜர் செய்தார்கள். அந்த இடத்தில் அத்தாட்சி தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் நானும், மதன் என்பவரும் கையொப்பம் செய்தோம், அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இருச்சக்கர வாகனம் Shine என்ற வாகனமாகும், அது Grey கலர் உள்ள வாகனமாகும். அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருச்சக்கர வாகனம் அத்தாட்சி தயார் செய்த இடத்தில் கைப்பற்றப்பட்டதாகும். என்னிடம் காட்டப்படும் அரிவாள் அத்தாட்சி மூலம் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட அரிவாளாகும். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருச்சக்கர வாகனம் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2025 அன்று வியாழக் கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.19 19:00:11 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
19.08.2025